

ஆசியாவின், மிக நீளமான மெட்ரோ ரயில் நிலையமாக, சென்ட்ரல் மெட்ரோ நிலையம் உள்ளது. இந் நிலையத்தின் கட்டுமான பணிகள் முடிந்துள்ளதால், மெட்ரோ நிர்வாகம் கையகப்படுத்திய, ரிப்பன் மாளிகைக்கு முன் உள்ள, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலம், திரும்ப ஒப்படைக்கப்பட உள்ளது. இந்த இடத்தில், பிரம்மாண்ட பூங்கா அமைக்க, மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.